Sl. No. 01003293

**DELA**

# 2012

# LAW — PAPER I

**( The Indian Penal Code, Final Report and Framing of Charges including Translation )**

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Versions )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

Duration : 3 Hours ] [ Maximum Marks : 100

அறிவுரைகள் / Instructions

( கீழ்க்கண்ட அறிவுரைகளை மீறும் விண்ணப்பதாரர்கள் தண்டிக்கப்படுவார்கள் )

( Candidates will be penalized for failure to comply with the following instructions )

1. இது ஒரு வினா-விடைத்தாள் தொகுப்பு ஆகும் மேலும் இதனுடன் OMR தாள் இணைக்கப்பட்டுள்ளது. OMR தாளை வினா-விடைத்தாள் தொகுப்பிலிருந்து தனியாக பிரிக்கக்கூடாது. ஒவ்வொரு வினாவிற்கும் தனித்தனியாக விடை எழுதுவதற்கென இடம் அளிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் விடையளிப்பதற்கென கொடுக்கப்பட்ட இடத்திலேயே விடையளிக்க வேண்டும்.

   This is a question cum answer booklet having OMR sheet attached. Do not detach the OMR sheet from the question cum answer booklet. Space for each question is provided against each question. The candidate has to answer the question in the space provided.



https://sarkarirecruitment.com/

2. விண்ணப்பதாரர்கள் தங்களது பதிவெண்களை வினா-விடைத்தாள் தொகுப்புடன் இணைக்கப்பட்டுள்ள OMR தாளில் அதற்கென வழங்கப்பட்டுள்ள இடத்தைத் தவிர ( வினாவிடைத்தாள் தொகுப்பு, வரைகட்டத்தாள், நிலப்படம் அல்லது சஞ்சிகைத் தாள்கள் உட்பட ) வேறு எந்த இடத்திலும் எழுதக்கூடாது. இந்த அறிவுரையை மீறும் விண்ணப்பதாரர்களின் வினா-விடைத்தொகுப்பு செல்லாததாக்கப்படும்.

Candidates should not write their Register Numbers anywhere ( including question cum answer booklet, graph sheets, maps or in the journal sheets supplied to them ) except in the place provided on the OMR sheet attached with the question cum answer booklet. The question cum answer booklet of the candidate, who violates this instruction, will be invalidated.

3. விண்ணப்பதாரர் பதிவு எண்களைத் தவறாக எழுதினால் ஒரு மதிப்பெண் குறைக்கப்படும். பதிவு எண்ணுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் பதிவு எண்ணை எழுதாமல் விட்டுவிட்டாலும் ஒரு மதிப்பெண் குறைக்கப்படும்.

A reduction of *one* mark will be made for writing register number incorrectly. A reduction of *one* mark will be made for the omission to write the register number in the space provided for it.

4. விண்ணப்பதாரர்கள் எந்தவொரு பயன்பாட்டிற்கும் அதாவது விடையளித்தல், வரைதல், அடிக்கோடிடல், சிறப்புப்படுத்திக் காட்டுதல் ( Highlighting ) உள்ளிட்டவற்றிற்கும், நீலம் அல்லது கருப்பு அல்லது கருநீலம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒரே ஒரு நிற மையைக் கொண்ட மையூற்று எழுதுகோல் அல்லது பந்துமுனை எழுதுகோல் ( Fountain Pen or Ball Point Pen ) மட்டுமே வினா-விடைத்தாள் தொகுப்பு முழுவதும் பயன்படுத்த வேண்டும்.

Candidates should use only pen ( Fountain pen or Ball point pen ) with only any one of the three coloured inks viz., Blue or Black (or) Blue Black for all the purposes including answering, drawing, underlining, highlighting etc., in the entire question cum answer booklet.



https://sarkarirecruitment.com/

5. எந்த ஒரு பயன்பாட்டிற்கும் வரைகோல் ( Sketch pen ) அல்லது பென்சில் அல்லது வேறு எந்த எழுது கருவிகளையும் ( Writing devices ) உபயோகிக்கக்கூடாது. இந்த அறிவுரையை மீறுவோரின் வினா-விடைத்தாள்தொகுப்பு செல்லாததாக்கப்படும்.

Candidates should not use sketch pens, pencils or any other writing devices for any purpose. The question cum answer booklets of the candidates, who violate this instruction, will be invalidated.

6. வினாக்களுக்கு விண்ணப்பதாரர்கள் தமிழில் *அல்லது* ஆங்கிலத்தில் விடையளிக்கலாம். ஒரு பகுதி தமிழிலும் மறு பகுதி ஆங்கிலத்திலும் கூட விடையளிக்கலாம்.

Candidates have the option to answer the questions either in English or in Tamil. They are permitted to write even partly in English or partly in Tamil.

7. விண்ணப்பதாரர்கள் விடை அளிக்கும் போது ஆணை, தீர்ப்பு அல்லது கடிதம் முதலியவற்றிற்கும் கூட வினாவில் குறிப்பிட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே எழுத வேண்டும்.

While answering order, judgements or letter writing questions, candidates should use only the names and/or address given in the question.

8. விண்ணப்பதாரர்கள் தங்களது வினா-விடைத்தொகுப்பு வினாக்களில் குறிப்பிட்டுள்ள பெயர் மற்றும் முகவரி தவிர வேறு பெயர் அல்லது சுருக்கொப்பம் அல்லது முகவரி எழுதி இருந்தாலும் அல்லது விண்ணப்பதாரர் தனது பெயரையோ அல்லது தனது சுருக்கொப்பத்தையோ விடைத்தாளின் எந்த இடத்தில் எழுதியிருந்தாலும் அவர்களது வினா-விடைத்தாள்தொகுப்பு செல்லாததாக்கப்படும்.

The question cum answer booklet of the candidate will also be invalidated for writing candidate's name or initial anywhere in the question cum answer booklet or writing any other name or initial or address in the question cum answer booklet, other than given in the question.



https://sarkarirecruitment.com/

9. விண்ணப்பதாரர் தங்களது வினா-விடைத்தாள்தொகுப்பில் சம்பந்தமற்ற பொருத்தமற்ற குறிப்புகளை எழுதவோ அல்லது முறையீடு செய்யவோ அல்லது விண்ணப்பதாரரின் அடையாளத்தை குறிக்கும் வகையில் குறியீடு செய்யவோ அல்லது அதிக மதிப்பெண் அளிக்கக் கோரி தேர்வாளரின் பரிவைத் தூண்டும் வகையில் முறையீடு செய்யவோ கூடாது. மீறினால் அவர் அந்த பதவிக்கான நியமனத்திற்கு தகுதியற்றவராக்கப்படுவார்.

Candidates should not write irrelevant or impertinent remarks or any appeal or any marks revealing identity of the candidates or irrelevant matter including an appeal or invoking sympathy of the examiner for higher marks in the question cum answer booklet. The candidates who violate these instructions will be disqualified for that recruitment.

10. விண்ணப்பதாரர்கள் மற்றவர்களைப் பார்த்து எழுதுவது, மற்றவர்களுக்குத் தெரிவிப்பது, தேர்வுக்கூட கண்காணிப்பாளர் அல்லது மற்றவர்கள் உதவியை நாடுவது போன்றவை தடை செய்யப்பட்டுள்ளன. நுழைவுக் குறிப்பாணையிலும் கண்டிப்பாக எதுவும் எழுதக்கூடாது. மேலும் செல்லிடப்பேசி ( செல்லுலர் போன் ) அகவி ( பேஜர் ) துணுக்குகள் அல்லது துண்டுக் காகிதங்கள் ஆகிய எவற்றையும் தேர்வுக் கூடத்திற்குள் கொண்டு செல்ல அனுமதியில்லை.

Candidates are also prohibited from communicating or copying from one another or seeking the help of an invigilator or any outsider. Candidates are also strictly prohibited from writing anything on the memorandum of admission. They are also prohibited from carrying the cellular phone, pager, scrap or rough paper into the examination hall.

11. தங்கள் வினா-விடைத்தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்து விடக்கூடாது.

Do not tear off any leaves from your question cum answer booklet.

12. தேர்வுக்கூடத்தை விட்டு வெளியில் செல்வதற்கு முன்பாக தங்கள் வினா விடைத்தாள் தொகுப்பு மற்றும் OMR தாளை கண்காணிப்பாளரிடம் நேரில் ஒப்படைத்து விட்டுத்தான் செல்ல வேண்டும்.

Do hand over your question cum answer booklet and OMR sheet personally to the invigilator before leaving the examination hall.



https://sarkarirecruitment.com/

விண்ணப்பதாரர்களுக்கு அறிவுரைகள் : அனைத்துப் பகுதிகளுக்கும் விடையளிக்கவும்.

*Instruction to the Candidates :* Answer *all* the Parts.

## பகுதி – 'அ' / PART – A

### மொழிபெயர்ப்பு / Translation

*குறிப்பு :* இருவினாக்களுக்கும் விடையளி.

*Note :* Answer both the questions.

( மதிப்பெண்கள் / Marks : 2 × 10 = 20 )

Q. 1. பின்வரும் பத்தியை தமிழில் மொழிபெயர்ப்பு செய்க / Translate the following passage into Tamil : ( 10 marks )

India being a land of diversity, people of different castes, creeds and communities live together. The divergence in norms, customs, taboos, traditions, values and moral standards of the people belonging to different groups often lead to frequent clashes which provide fertile ground for the incidence of crime. It may further be added that with the growing complexities of modern life, many anti-social acts which were hitherto considered to be immoral and offensive and received public condemnation have now almost become a part and parcel of everyday life. Bribery and corruption are just a few examples of this change in attitude of the people.

Consequently, the difference between criminals and non-criminals has drastically narrowed down. That is to say, both criminals and non-criminals indulge in similar activities, the only difference between them being that the former are caught in legal net because of their lack of skill and vigil while the latter go scot-free being shrewd enough to manipulate their non-detection and escape. Thus it is evident that the attitude of the society towards criminality has changed with the changing patterns of Indian society.

https://sarkarirecruitment.com/

Q. 2. பின்வரும் பத்தியை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பு செய்க / Translate the following passage into English : ( 10 marks)

நான் குப்புசாமி தெருவில் டீக்கடை வைத்திருக்கின்றேன். பத்து வருடங்களாகக் கடை வைத்திருக்கிறேன். முதல் எதிரியை எனக்கு நன்கு தெரியும். அவர் அடிக்கடி எனது கடையில் வந்து டீ சாப்பிடுவார். முன்பு அவர் மிகவும் ஏழையாக இருந்தார். அவரது பிள்ளைகளைக் கூட அவரால் படிக்க வைக்க இயலவில்லை. தற்போது அவர் செல்வந்தராக இருக்கிறார்.

இரண்டு வருடங்களாக இரண்டாவது எதிரியை எனக்குத் தெரியும். இருவருமாக பலநாட்கள் எனது டீக்கடைக்கு வந்திருக்கிறார்கள். எப்போதும் 'புது ரூபாய் கட்டுகள்' என்று அடிக்கடி கூறுவதைக் கேட்டிருக்கிறேன்.

என்னிடம் 'உன்னிடம் உள்ள பழைய நோட்டுகளைக் கொடு புது ரூபாய் கொடுக்கிறேன், என்று கூறுவார்கள். நானும் பழைய ரூபாய் கொடுத்து, புதுரூபாய் அவர்களிடம் இருந்து வாங்கியிருக்கிறேன். அப்போதெல்லாம் இவர்கள் கள்ளநோட்டு தருகிறார்கள் என்று தெரியாது. புது நோட்டு எப்படிக் கிடைக்கிறது என்று கேட்டால் / பட்டணத்தில் உள்ள வங்கியில் சென்று மாற்றுவதாகக் கூறினார்கள். இதனைப்போன்று ஊரில் பலருக்கு வழங்கியுள்ளார்கள். புதுநோட்டுக்களாக ஆலயத்தில் சாமிக்கு நன்கொடை வழங்கியுள்ளனர். பலருக்கு உதவியும் செய்திருக்கிறார்கள். இது குறித்து காவல்துறையினரிடம் அறிவேன் சாட்சியாக கையெழுத்துப் போட்டேன்.

https://sarkarirecruitment.com/

## பகுதி – 'ஆ' / PART – B

( மதிப்பெண்கள் / Marks : 5 × 12 = 60 )

*குறிப்பு :* வினா எண் 1 க்கு கட்டாயமாகவும் மற்றும் பிறதர ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். ஒவ்வொரு வினாவிற்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். அனைத்து வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

*Note :* Answer Question No. 1 and any other *four* questions ( Each in not more than 250 words ). *All* questions carry equal marks.

---

Q. 1. (அ) அல்லது (ஆ) ஏதேனும் ஒன்றிற்கு விடை எழுதுக :

Answer either (a) or (b) :

அ) *A* ஏற்கனவே சிறைக்கைதியாக சிறையில் இருக்கிறார். சிறை மருத்துவர் *B*. *A* ன் விருப்பத்திற்கு மாறாக *A* க்கு குடல் கழுவும் மருந்தை அளிக்கிறார். எனவே *A* சிறையில் உள்ள அறைக்குள்ளேயே இருக்க வேண்டியதாயிற்று. சிறை மருத்துவர் மீது முறையின்றி சிறைவைத்த குற்றத்திற்காக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சட்ட வகையங்கள் மற்றும் முடிவு செய்யப்பட்ட வழக்குகள் மூலம் சிறைமருத்துவர் குற்றம் செய்தார் என்பதை எடுத்துக்காட்டவும்.

ஆ) அரசிற்கு சொந்தமான போக்குவரத்துக் கழகத்தின் ஊழியர்கள் பேருந்து தடங்களை தனியாருக்கு ஒப்படைக்க அரசு எடுத்த முடிவை எதிர்த்து ஊர்வலம் சென்றனர். அப்போது போக்குவரத்து அமைச்சரை தகாத, கேவலமான வார்த்தைகளினால் திட்டினர். ஊழியர்கள் மீது அவதூறு குற்றத்திற்காக வழக்கு தொடரப்பட்டுள்ளது. சட்ட வகையங்கள் மற்றும் முடிவு செய்யப்பட்ட வழக்குகள் மூலம் ஊழியர்கள் குற்றம் செய்தனரா என்பதைக் காட்டவும்.

a) *A* was already undergoing imprisonment. *B*, the jail doctor administered enema to *A* against the will of *A*. Hence *A* was to be confined in the cell. The doctor was prosecuted for wrongful confinement.

Illustrate with provisions of law and decided cases whether the doctor committed the said offence.

b) The employees of the State owned Transport Corporation protesting against the decision of the State to privatise the bus routes, took out a procession. During the procession they used vulgar and indecent words against the Transport Minister. The employees were prosecuted for defamation.

Illustrate with provision of law and decided cases whether the employees committed the said offence.

https://sarkarirecruitment.com/

| | | |
|---|---|---|
| ஒ. | 2. | 'குறிப்பிட்ட சில விதிவிலக்குகளை தவிர, குடிபோதை என்பது சிறந்த எதிர்வாதமாக குற்றவியல் ( Criminal ) குற்றச் சாட்டிற்கு அமைவதில்லை' இக்கூற்று எந்த அளவிற்கு இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கு பொருந்திவரும் ?<br>"Subject to very limited exceptions, drunkenness is no defence in a criminal charge." ( *Lord Denning* )<br>How far this dictum is true under Indian Penal Code ? |

ELA

| | | |
|---|---|---|
| ஒ. | 3. | 'தீயநோக்கு மாற்றம்' என்றால் என்ன ? இதை மரணம் விளைவிக்கும் குற்றத்தோடு தொடர்புபடுத்தி, இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகளில் கொடுக்கப்பட்ட விளக்கம் மற்றும் உதாரணங்களின் துணை கொண்டு விளக்குக.<br>What is transferred malice ? Explain it with relation to culpable homicide, with the help of illustrations and explanations offered under the Indian Penal Code. |

DELA

| | | |
|---|---|---|
| ஒ. | 4. | ஒரு நபரது செயல் எப்போது தீயால் அழிவு செய்யும் கொடுங்குற்றம் ஆகும் என்பதை விளக்குக.<br>Explain the circumstances where the act of a person would amount to arson |

DELA

| | | |
|---|---|---|
| ஒ. | 5. | குற்றமுறு அத்துமீறலின் முக்கியக் காரணிகளை அளித்து, அது வீட்டினுள் அத்துமீறல் ஆகும் நிலைகளை விளக்குக.<br>Give the essential ingredients of criminal trespass and also explain the various circumstances where criminal trespass would amount to house trespass. |

https://sarkarirecruitment.com/

| | | |
|---|---|---|
| 9. | 6. | பின்வரும் வழக்குகளில் அறுதியிடப்பட்ட கோட்பாடுகளை விளக்குக :<br>அ) பரேந்திரகுமார் கோசு *எதிர்* கிங் எம்பரர் AIR 1925 PCI (7)<br>ஆ) கெகர்சிங் *எதிர்* அரசு ( டெல்லி நிர்வாகம் ) AIR 1988 SC1883.<br>Explain the principles laid down in the following cases :<br>a) Barendra Kumar Ghosh *vs* King Emperor AIR 1925 PCI(7)<br>b) Kehar Singh *vs* State ( Delhi Admn. ) AIR 1988 SC1883. |



| | | |
|---|---|---|
| 9. | 7. | பின்வரும் எவையேனும் இரண்டிற்கு சிறு குறிப்பு வரைக :<br>Write short notes on any *two* of the following :<br>a) குற்றவாளிகளை மறைத்து வைத்தல்.<br>Screening of offenders. |



| | |
|---|---|
| | b) துவக்கநிலை குற்றங்கள் குறித்த சட்டம்<br>The Law of inchoate crimes |



| | |
|---|---|
| | c) போலியாகத் தாள் நாணயம் தயாரித்தல்<br>Counterfeiting currency notes. |

https://sarkarirecruitment.com/

பகுதி – 'இ' / **PART – C**

( மதிப்பெண்கள் / Marks : 2 × 10 = 20 )

*குறிப்பு :* இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும். ஒவ்வொன்றிற்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். இரு வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

*Note :* Answer both the questions. Each in not more than 200 words. Both the questions carry equal marks.

| Q. | 1. | காவல்துறை மீண்டும் புலன் விசாரணை செய்ய நீதிமன்றம் ஆணையிடும் போது குற்றம் சாட்டப்பட்டவரின் உரிமைகளை ஆய்க.<br>Examine the rights of the accused when a court is making an order for further investigation by the police. |
|---|---|---|



| Q. | 2. | அ) குற்றச்சாட்டை விளக்குக. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி குற்றச்சாட்டு குறித்த முக்கிய வகையங்களை சுருக்கமாக விளக்குக.<br>ஆ) பின்வரும் பொருண்மைகளின் அடிப்படையில் உரிய குற்றச்சாட்டு வரைக :<br>*A* என்பவர் *B* க்கு 01. 08. 1999 அன்று மதுரை கிழக்கு மாசித் தெருவில் உள்ள தனது வீட்டை வாடகைக்கு விடுகின்றார். *B* வாடகையை ஒழுங்காகச் செலுத்தாததால் வீட்டை காலி செய்வதற்காக *A* வழக்கு தொடர்ந்தார். வாடகைத் தீர்ப்பாயம் 24. 02. 2007 அன்று வீட்டை *B* காலி செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது. அதன் பின்பு *B* வீட்டைக் காலி செய்யவில்லை இதனால் ஆத்திரம் அடைந்த *A* தன்னுடன் *X*, *Y*, *Z* என்பவர்களை உதவிக்காக அழைத்து, வழக்கிற்கு உட்பட்ட வீட்டில் 23. 08. 2007 அன்று நுழைந்து *B* யை வீட்டில் இருந்து வெளியேற்றினார். *B* இதைத் தடுத்த போது *X*, *Y*, *Z* மூவரும் *B* யைத் தாக்கினர். இதனால் *B* க்கு கொடுங்காயம் ஏற்பட்டது.<br>a) Explain charge. Explain in brief the provisions relating to the form of a charge under the Criminal Procedure Code.<br>b) Based on the following facts frame the charges :<br>*A* rented out on 1.8.1999 his house at East Masi Street, Madurai to *B*. Since *B* did not remit the rent regularly, *A* filed a petition for eviction. The Rent Tribunal ordered for eviction on 24. 2. 2007. Even after that *B* did not vacate the house. Provoked by this *A* with the assistance of *X*, *Y* and *Z* entered the disputed house on 23. 08. 2007 and evicted *B*. When *B* had resisted, *X*, *Y* and *Z* attacked *B* and thereby *B* sustained grievous injuries. |
|---|---|---|

https://sarkarirecruitment.com/